வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்—நாராயணசாமி

தேதி 17.1.2026 நேரம்-மாலை 6.10 மணி

-----------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

இந்தியா ஒரு தற்சார்பு மற்றும் வளர்ந்த நாடாக மாறுவதில் அடுத்த இரண்டு தசாப்தங்கள் மிக முக்கியமானதாக இருக்கும் என்று குடியரசு துணைத் தலைவர் திரு சி பி இராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி, மேற்கு வங்கத்தில், ஹவுரா மற்றும் குவஹாத்தி இடையே, படுக்கை வசதி கொண்ட இந்தியாவின் முதல் வந்தே பாரத் ரயிலை இன்று கொடியசைத்து தொடக்கி வைத்தார்.

கைவினை கலைஞர்களுக்கான பிரதம மந்திரி விஸ்வகர்மா ஹாட் 2026 கண்காட்சி நாளை புதுடெல்லியில் உள்ள டில்லி ஹாட்டில் தொடங்குகிறது.

பொங்கல் திருநாளின் 4 ஆவது நாளான இன்று தமிழகம் மற்றும் புதுச்சேரியில் காணும் பொங்கல் உற்சாகத்துடன் கொண்டாடப்பட்டது.

குடியரசு துணைத் தலைவர் (17)

இந்தியா ஒரு தற்சார்பு மற்றும் வளர்ந்த நாடாக மாறுவதில் அடுத்த இரண்டு தசாப்தங்கள் மிக முக்கியமானதாக இருக்கும் என்று குடியரசு துணைத் தலைவர் திரு சி பி இராதாகிருஷ்ணன் கூறியுள்ளார். இன்று டேராடூனில் நடைபெற்ற ஒரு தனியார் நிகழ்ச்சியில், ஊடகங்களின் பங்கு குறித்து பேசிய அவர், ஜனநாயகத்தின் 4 ஆவது தூணாக ஊடகங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன என்று கூறினார். புதுப்பிக்கத் தக்க ஆற்றல், இயற்கை விவசாயம், ஆயுஷ், சுற்றுலா, ஸ்டார்ட் அப்கள், மற்றும் திறன் மேம்பாடு ஆகியவற்றில் உத்ரகண்ட் மாநிலத்தின் பரந்த ஆற்றலை அவர் எடுத்துரைத்தார். அம்மாநில முதலமைச்சர் திரு புஷ்கர் சிங் தாமி தலைமையில் உத்ரகண்ட் மாநிலம் புதிய வளர்ச்சி உச்சங்களை அடையும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார். இளைஞர்கள் இடையே, நேர்மறை சிந்தனையை வலுப்படுத்தவும், தேசத்தை கட்டி எழுப்பும் உணர்வை வலுப்படுத்தவும் நேர்மறை மற்றும் வளர்ச்சி சார்ந்த முயற்சிகளுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார். பிரதமர் திரு நரேந்திர மோடியின் தலைமையில் கடந்த 10 ஆண்டுகளில் சாலை, ரயில், விமானம் மற்றும் தகவல் தொடர்பு இணைப்புகளில் உத்ரகண்ட் மாநிலம் குறிப்பிடத் தக்க முன்னேற்றத்தை கண்டுள்ளது என்று அவர் பெருமிதம் தெரிவித்தார்.

*மோடி பயணம் 1* (14)

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று முதல் 2 நாள் பயணமாக மேற்கு வங்கம் மற்றும் அசாம் மாநிலங்களுக்கு பயணம் மேற்கொள்கிறார். இப்பயணத்தின் முதற் கட்டமாக மேற்கு வங்கம் சென்ற அவர், இன்று மதியம் மால்டா மாவட்டத்தில் உள்ள, மால்டா நகர ரயில் நிலையத்தில் ஹவுரா மற்றும் குவஹாத்தி இடையே படுக்கை வசதி கொண்ட இந்தியாவின் முதல் வந்தே பாரத் ரயிலை கொடியசைத்து தொடக்கி வைத்தார். மறுமார்க்கமாக குவஹாத்தி-ஹவுரா வந்தே பாரத் ரயிலையும் காணொலி காட்சி மூலம் பிரதமர் தொடக்கி வைத்தார். தொடர்ந்து, 3 ஆயிரத்து 200 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு ரயில் மற்றும் சாலை உள்கட்டமைப்பு திட்டங்களை அவர் நாட்டிற்கு அர்ப்பணித்து அடிக்கல் நாட்டினார். மாலையில் குவஹாத்தியில் போடோ சமூகத்தின் வளமான பாரம்பரியத்தை கொண்டாடும் வரலாற்று சிறப்பு மிக்க கலாச்சார நிகழ்வான பகுரும்பா த்வெள 2026 ல் பங்கேற்றார். நாளை பிரதமர் பங்கேற்கும் நிகழ்ச்சிகள் குறித்த ஒரு செய்தித் தொகுப்பு......

(வாய்ஸ்)

*மோடி பயணம் 1* (14)

(வாய்ஸ்)

பிரதமர் திரு நரேந்திர மோடி தனது பயணத்தின் இரண்டாம் கட்டமாக, இன்று மாலை அசாம் மாநிலத்திற்கு செல்கிறார். அங்கு பல்வேறு வளர்ச்சி திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டும் நிகழ்ச்சியில் பங்கேற்ற பின்னர், இரண்டு புதிய அம்ருத் பாரத் விரைவு ரயில்களை கொடியசைத்து பிரதமர் தொடங்கி வைக்கிறார். நாளை காலை 11 மணியளவில், பிரதமர் நாகாவ்ன் மாவட்டத்தில் உள்ள காளியாபோரில் 6 ஆயிரத்து தொள்ளாயிரத்து 50 கோடி ரூபாய் மதிப்பிலான காசிரங்கா மேம்பால வழித்தட திட்டத்திற்கு அடிக்கல் நாட்டிய பின்னர் அங்கு நடைபெறும் பொதுக் கூட்டத்திலும் உரையாற்ற உள்ளார். இந்த மேம்பால வன விலங்கு வழித்தடம் விலங்குகளின் தடையற்ற நடமாட்டத்தை உறுதி செய்வதோடு, மனித மற்றும் வன விலங்கு மோதல்களை குறைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், சாலை பாதுகாப்பை மேம்படுத்துவதோடு, பயண நேரத்தை குறைத்து, பயணிகள் மற்றும் சரக்கு போக்குவரத்திற்கும் பெரும் உதவிகரமாக இருக்கும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

அணிவகுப்பு (9)

வந்தே மாதரம் பாடலின் 150 வது ஆண்டை கொண்டாடும் வகையிலான மையக்கருத்தோடு குடியரசு தின அணிவகுப்பு நடைபெற உள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது. புதுடெல்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய பாதுகாப்புத் துறை செயலர் திரு ராஜேஷ்குமார் சிங், சுய சார்பு இந்தியாவிற்கான தொலைநோக்கு பார்வையுடன் வந்தே மாதரம் பாடலுக்கு புகழாரம் சூட்டும் வகையில் இந்த அணிவகுப்பு நடைபெற உள்ளதாக தெரிவித்தார். 2 ஆயிரத்து 500 க்கும் மேற்பட்டோர் பங்கேற்கும் கலைநிகழ்ச்சி பார்வையாளர்களை பிரமிக்க வைக்கும் என்றும் அவர் கூறியுள்ளார்.

எம்ஜிஆர் (18)

தமிழக முன்னாள் முதலமைச்சர் டாக்டர் எம்.ஜி. ராமச்சந்திரனின் 109 ஆவது பிறந்த நாளை ஒட்டி, குடியரசு துணைத் தலைவர் திரு சி பி இராதாகிருஷ்ணன் வெளியிட்டுள்ள செய்தியில், ஏழைகள் மற்றும் நடுத்தர மக்களின் நலனுக்காக தமது வாழ்க்கையை அர்ப்பணித்தவர் எம்ஜிஆர் என்று குறிப்பிட்டுள்ளார். பிரதமர் திரு நரேந்திர மோடி வெளியிட்டுள்ள செய்தியில், தமிழகத்தின் வளர்ச்சி மற்றும் கலாச்சாரத்தை முன்னெடுத்து

செல்வதில் எம்ஜி ராமச்சந்திரன் பெரும் பங்காற்றியதாக புகழாரம் சூட்டினார். தமிழக பள்ளிகளில் சத்துணவு திட்டம், கல்வித் திட்டங்கள், பெண்களுக்கான நலத்திட்டங்கள் போன்றவற்றை செயல்படுத்தியவர் டாக்டர் எம் ஜி ராமச்சந்திரன் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் கூறியுள்ளார். புதுச்சேரியில், டாக்டர் எம்ஜி ராமச்சந்திரனின் பிறந்த நாளை முன்னிட்டு புதிய பேருந்து நிலையம் எதிரில் உள்ள அன்னாரது சிலைக்கு துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். நிகழ்ச்சியில், சட்டப்பேரவை தலைவர் திரு செல்வம், பொதுப்பணித்துறை அமைச்சர் திரு லட்சுமி நாராயணன், சட்டப்பேரவை துணைத் தலைவர் திரு ராஜவேலு, சட்டமன்ற உறுப்பினர்கள் திரு ஏ கே டி ஆறுமுகம், திரு சாய் ஜெ சரவணக்குமார். திரு லட்சுமிகாந்தன் ஆகியோர் பங்கேற்றனர்.

*விஸ்வகர்மா* 1 (6)

கைவினை கலைஞர்களுக்காக பிரத்யேகமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பிரதம மந்திரி விஸ்வகர்மா ஹாட் 2026 கண்காட்சி நாளை முதல் புதுடெல்லியில் உள்ள டில்லிஹாட்டில் தொடங்குகிறது. இந்த கண்காட்சியை மத்திய சிறு குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள்

துறை அமைச்சர் திரு ஜித்தன் ராம் மான்ஜி தொடங்கி வைக்க உள்ளார். இதுகுறித்த ஒரு செய்தித் தொகுப்பு.......

(வாய்ஸ்)

விஸ்வகர்மா 2 (13)

(வாய்ஸ்)

பிரதம மந்திரி விஸ்வகர்மா ஹாட் 2026 கண்காட்சி நாட்டின் வளமான பாரம்பரிய கைவினை திறன் மரபை கொண்டாடுவதையும், காட்சிப்படுத்துவதையும் நோக்கமாக கொண்டுள்ளது. நாட்டின் பல்வேறு கைவினை கலைஞர்கள் தங்கள் கைவினை பொருட்களை தேசிய மற்றும் சர்வதேச பயனாளர்கள், பங்குதாரர்கள் மற்றும் பொதுமக்களிடம் சந்தைப்படுத்தவும் இந்த கண்காட்சி ஒரு சிறந்த தளமாக அமையும். நாடு முழுவதிலும் உள்ள பல்வேறு மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களை சேர்ந்த 117 க்கும் மேற்பட்ட கைவினை கலைஞர்கள் இதில் பங்கேற்று, தங்களது பாரம்பரிய திறன்கள் மற்றும் கலைகளை பிரதிநிதித்துவப் படுத்தும் ஒரு நிகழ்வாக அமையும் என்று அமைச்சகம் தெரிவித்துள்ளது. இந்த நிகழ்ச்சிக்கு வெளிநாட்டு தூதரகங்களின் பிரதிநிதிகளும் அழைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத் தக்கது. இந்த

கண்காட்சி நாளை தொடங்கி, வரும் 31 ஆம் தேதி நிறைவடையும் என்றும், அறிவிக்கப்பட்டுள்ளது.

*காணும் பொங்கல் (13)*

பொங்கல் திருநாளின் 4 ஆவது நாளான இன்று தமிழகம் மற்றும் புதுச்சேரியில் காணும் பொங்கல் உற்சாகத்துடன் கொண்டாடப்பட்டது. மக்கள் தங்களது உறவினர்களையும், நண்பர்களையும் சந்தித்து, வாழ்த்துக்களை பறிமாறிக்கொண்டதுடன், பல்வேறு சுற்றுலா தலங்களுக்கு குடும்பத்தினருடன் சென்று மகிழ்ந்தனர். காணும் பொங்கலை ஒட்டி, மதுரை அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு போட்டிகள் இன்று காலை 7 மணிக்கு தொடங்கி விறுவிறுப்பாக நடைபெற்றது. இப்போட்டியில் வாடி வாசலில் இருந்து வெளியேறிய ஆயிரக்கணக்கான காளைகளை அடக்க, 550 க்கும் மேற்பட்ட மாடுபிடி வீரர்கள் களம் இறங்கினர். முன்னதாக, இன்று காலை இப்போட்டிகளை பார்வையிட்ட தமிழக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின், ஜல்லிக்கட்டு போட்டிகளில் வெற்றி பெறும் சிறந்த மாடுபிடி வீரர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில்

கால்நடை பராமரிப்புத் துறையில் அரசு வேலை வழங்கப்படும் என தெரிவித்தார்.

*சுபான்ஷூ சுக்லா* (9)

புதுடெல்லியில் மெய்நிகர் ரியாலிட்டி தியேட்டர் மற்றும் குழு கண்காட்சியை குருப் கேப்டன் திரு சுபான்ஷூ சுக்லா இன்று தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் திரு சுக்லா ஆக்சியம் – 4 திட்டத்தில் பங்கேற்ற தனது அனுபவத்தை பகிர்ந்து கொண்டதோடு, விண்வெளியில் வாழ்க்கை மற்றும் வேலை, விண்வெளி வீரர் பயிற்சி மற்றும் சுற்றுப்பாதை பயணங்களின் சவால்கள் குறித்து எடுத்துரைத்தார். பல்வேறு பள்ளிகளை சேர்ந்த சுமார் 400 க்கும் மேற்பட்ட மாணவர்களுடன் உரையாடிய திரு சுக்லா, விண்வெளி மற்றும் தொழில்நுட்பத்தில் மாணவர்கள், திறமைகளை வளர்த்துக்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தினார்.

*காரைக்கால்* (17)

காரைக்கால் சுற்றுலாத் துறை மற்றும் கலை பண்பாட்டுத் துறை இணைந்து நடத்தும் கார்னிவேல்-2026 ன் ஒரு பகுதியாக மினி மாரத்தான் ஓட்டம், காரைக்கால் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் இன்று

காலை நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் குடிமைப்பொருள் வழங்கள் மற்றும் நுகர்வோர் விவகாரங்கள் துறை அமைச்சர் திரு பி ஆர் என் திருமுருகன், மாவட்ட ஆட்சியர் திரு ரவிப்பிரகாஷ் ஆகியோர் கலந்து கொண்டு கொடியசைத்து துவக்கி வைத்தனர். இப்போட்டி 4 பிரிவுகளில் நடத்தப்பட்டது. கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவ-மாணவிகள் ஆர்வமுடன் பங்கேற்றனர். 5 கிலோ மீட்டர் தூரம் கொண்ட மினி மாரத்தான் போட்டியானது மாவட்ட ஆட்சியர் அலுவல வளாகத்தில் தொடங்கி, காமராஜர் சாலை, பி கே சாலை, பாரதியார் வீதி மற்றும் தாமஸ் அருள் வீதி வரையில் சென்று, தொடங்கிய இடத்திலேயே முடிவுபெற்றது. இப்போட்டிகளில் 52 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு, கார்னிவேலின் இறுதி நாளான நாளை அவர்களுக்கு ரொக்கப்பரிசு வழங்கப்பட உள்ளது. இந்நிகழ்ச்சியில் சார்பு மாவட்ட ஆட்சியர் செல்வி பூஜா, உடற்கல்வி ஆசிரியர் திரு வெங்கடேஷ் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

*ஹஜ் யாத்திரை (6)*

ஹஜ் யாத்திரைக்கான நடைமுறைகளை முடிப்பதற்கான காலக்கெடு வரும் 25 ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. இந்த

தேதிக்கு பிறகு கூடுதல் அவகாசம் வழங்கப்பட மாட்டாது என்று சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சகம் தெளிவுப்படுத்தி உள்ளது. ஹஜ் யாத்ரிகர்கள் தங்களின் முன்பதிவு மற்றும் பிற ஆவணங்களை இறுதி செய்யுமாறு அமைச்சகம் வலியுறுத்தி உள்ளது.

கிரிக்கெட் (6)

மகளிர் ப்ரிமியர் லீக் கிரிக்கெட் போட்டி நவி மும்பையில் உள்ள டாக்டர் டி ஒய் பாட்டில் விளையாட்டு அகடமியில் நடைபெற்று வருகிறது. முதலில் ஆடிய யு பி வாரியர்ஸ் அணி, 20 ஓவர்களில், 8 விக்கெட் இழப்பிற்கு, 187 ரன் எடுத்தது. 188 ரன் என்ற இலக்கை நோக்கி, ஆடி வரும் மும்பை இந்தியன்ஸ் அணி சற்று முன் வரை, ------ ஓவர்களில், ------- விக்கெட் இழப்பிற்கு, -------- ரன்களை எடுத்துள்ளது.